மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை கொள்ளும்
வ ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 15 புதன்கிழமை (29 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 122

# வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றுவதற்கு
# 3 வார காலக்கெடு வழங்கினார் பிரபாகரன்!

## முடிவுகளை செயற்படுத்துவது பேச்சுக்கு ஏதுவாக அமையும் என்றும் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 29

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு மூன்று வார காலக்கெடுவை தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விதித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்காவுக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்திலேயே காலக்கெடு வழங்குவது குறித்து தமிழீழத் தேசியத தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசு முடிவெடுத்த விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதும் ஏனைய பிரச்சினைகளுக்கும் சாதகமான தீர்வு காண்பதும் இனப்பிரச்சினை குறித்த அரசியல் பேச்சுக்களுக்கு ஏதுவாக அமையும் என்பதையும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இக்கடிதத்தில் தலைவர் பிரபாகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

*அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:—*

*தலைமைச் செயலகம்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்,*
*யாழ்ப்பாணம்,*
*28 மார்ச், 1995.*

**கனம் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா,**
**சிறிலங்கா ஜனாதிபதி,**
**ஜனாதிபதியின் தலைமைச் செயலகம்,**
**கொழும்பு.**

**அன்பின் ஜனாதிபதி அவர்கட்கு,**

உங்களது 24 மார்ச் 1995 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. மிகவும் நன்றி.

உங்களது கடிதத்தின் உள்ளடக்கத்தை மிகவும் கவனமாக பரிசீலனை செய்தோம். நாம் எழுப்பிய சில கோரிக்கைகள் குறித்து அதில் ஆக்கபூர்வமான அம்சங்களைக் காணக் கூடியதாக இருந்தது. இதன் அடிப்படையில் நாம் விதித்த காலக்கெடுவை 19 ஏப்ரல் 1995 வரை பின்போடத் தீர்மானித்துள்ளோம். உங்களது முடிவுகளை தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு இந்தக் கால அவகாசம் ஏதுவாக அமையும்.

## காலக்கெடு விதிக்கும் உரிமை எமக்குண்டு

உங்களது கடிதத்தில், நாம் காலக்கெடு விதித்தமை குறித்து ஆட்சேபம் தெரிவித்துள்ளீர்கள். இது தவிர்க்க முடியாதது. எமது மக்களின் நலன்களைப் பேணும் வகையில், ஆக்கபூர்வமான முறையில், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எமக்குண்டு. எனவே பேச்சுக்கள் ஆக்கபூர்வமான பயன் தராது தேக்கநிலை அடையும் போது, பேச்சுக்களிலிருந்து விலகிக் கொள்ளும் நோக்குடன் ஒரு காலக்கெடுவை விதிக்கும் உரிமை எமக்குண்டு. சமாதானப் பேச்சில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பினர் என்ற வகையில் இந்த உரிமை எமக்கு இருக்கிறது.

எமது மக்களின் அன்றாட வாழ்வை ஆழமாகப் பாதித்து நிற்கும் பல பிரச்சினைகள் தீர்வு காணப்படாது பேச்சுக்கள் தேக்க நிலையை அடைந்த காரணத்தினாலேயே நாம் அரசுக்கு காலக்கெடு ஒன்றை விதிக்க நிர்ப்பந்திக்கப் பட்டோம்.

## கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் சமாதான நடைமுறை முன்னேற்றமடையும்

ஆயினும், நாம் எழுப்பிய கோரிக்கைகள் சிலவற்றிற்கு சாதகமான முறையில் நீங்கள் பதிலளித்திருப்பதால், எமது காலக்கெடுவை மூன்று வாரங்களுக்கு பின்போட நாம் தீர்மானித்திருக்கிறோம். இந்த கால அவகாசத்திற்குள் உங்களது முடிவுகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவீர்கள் என நாம் நம்புகிறோம். அப்படிச் செய்யும் பட்சத்தில், சமாதான நடைமுறை ஆக்கபூர்வமான திசையில் முன்னேற்றம் காணும்.

## பொருளாதார, மீன்பிடித் தடைகளை நீக்கும் ஆக்கபூர்வ முடிவுகளை வரவேற்கிறோம்

எரிபொருள் உட்பட பொருளாதாரத் தடையை நீக்குவதென்றும், மீன்பிடி மீதான கட்டுப்பாடுகளை முற்றாக அகற்றுவதென்றும் நீங்கள் மேற்கொண்ட ஆக்கபூர்வமான முடிவுகளை நாம் வரவேற்கிறோம். இந்த நல்ல முடிவுகளை வரவேற்கும் அதேவேளை, அவற்றை காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த உடனடியான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம். முடிவுகளும் சரி, உறுதிமொழிகளும் சரி, செம்மையான முறையில் நடைமுறை செய்யப்படாதுபோனால், அவற்றில் எவ்வித அர்த்தமும் இராது என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுவது அவசியமில்லை.

## முன்னைய முடிவு நடைமுறையாகவில்லையே!

எனவேதான், உங்களது முடிவுகளை காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த இந்தக் கால அவகாசத்தை நாம் உங்களுக்குத் தந்துள்ளோம். இந்த விடயத்தில், எமது அக்கறைப் பாட்டினை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறேன். இங்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுவதும் உகந்தது என நினைக்கிறேன். அதாவது, சில பொருள்கள் மீது பொருளாதாரத் தடைகளை தளர்த்துவதென, நீங்கள் முன்பு எடுத்த முடிவு, இராணுவ கெடுபிடிகளால், நடைமுறையாகவில்லை என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறோம்.

## ஏப்ரல் முதலாம் திகதி பேச்சு நடத்த தயார்!

நீங்கள் எடுத்துள்ள சாதகமான முடிவுகளை துரிதமாக நடைமுறைப்படுத்த இரு தரப்பினரும் சந்தித்துப் பேசுவது அவசியமென நீங்கள் கேட்டுள்ளீர்கள். இந்த யோசனையை நாம் வரவேற்கிறோம். ஏப்ரல் முதலாம் திகதி இந்த பேச்சுக்களை நடத்த நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.

## மற்றைய முக்கிய பிரச்சினைகள் குறித்து அரசு பதில் தராதது ஏமாற்றமளிக்கின்றது

உங்களது கடிதத்தில், ஏனைய முக்கிய பிரச்சினைகள் குறித்து எமக்குத் திருப்தியளிக்கும் வகையில் நீங்கள் பதில் தராமை எமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. யாழ்ப்பாணத்திற்கு ஒரு [illegible] பொறுத்தவரை [illegible]

## தலைவர் விதித்த காலக்கெடுவே சந்திரிகா இறங்கிவரக் காரணம்

### பத்திரிகையாளர் சந்திப்பில் அன்ரன் பாலசிங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

தலைவர் பிரபாகரன் விதித்த காலக்கெடுவே ஜனாதிபதி சந்திரிகா இறங்கி வரக் காரணமாகும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று மாலை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் உடனிருந்தார்.

திரு பாலசிங்கம் மேலும் கூறியதாவது:

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து முடிவு எடுப்பதற்கு அரசுக்கு மார்ச் 28 ஆம் திகதிவரை காலக்கெடு விதித்து தேசியத் தலைவர் பிரபாகரன் ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் காலக்கெடுவுக்கு — தலைவரின் நிபந்தனைகளுக்கு — பதிலாக தாம் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் — கடந்த 24 ஆம் திகதி — ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இரகசியமான முறையில் — அரச அதிபர் மூலமாக — எங்களுக்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தின் விவரத்தை நாம் வெளியிடவில்லை.

அந்தக் கடிதத்தில் ஆக்கபூர்வமான சில அம்சங்களும் இருக்கின்றன; சில பாதகமான அம்சங்களும் இருக்கின்றன.

இக் கடிதத்தை எமது தலைமைப்பீடம் கவனமாகப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த கட்டப் பேச்சுக்கு அமைச்சர்கள் வருவர்

### ஜி. எல். பீரிஸ் தகவல்

கொழும்பு, மார்ச் 29

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் அமைச்சர்கள் கொண்ட குழுவே பங்குகொள்ளும்.

இவ்வாறு அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களை அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடையில் நடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தக் குழுவில் இடம்பெறும் அமைச்சர்கள் விவரம் குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(ஓ-3)

## சமாதான சூழ்நிலை ஏற்பட்டாலே புனரமைப்புக்கு நிதிவழங்க முடியும்

### உதவி வழங்கும் நாடுகள் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 29

வடக்கு — கிழக்கில் சமாதான சூழ் நிலை உருவானால் மட்டுமே அங்கு புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள நிதி உதவிகளை வழங்க முடியும்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டதாக ''தஐலண்ட்'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது.

இலங்கையில் நடக்கும் யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட பகுதிகளை புனரமைக்க பெரும் கஷ்டத்தின் மத்தியில் நிதி பெறப்பட்டுள்ளதாகவும் —

வடக்கு — கிழக்கு பகுதிகளில் சமாதான சூழ்நிலை நிலவும் போது மட்டுமே அங்கு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் — உதவி வழங்கும் நாடுகளின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

(ஓ-3)

### பிரதமர் ராவ்வுடனான பேச்சின் போது அன்றி

## சாதாரணமான உரையாடலின்போது பிரபா விவகாரமும் இடம் பெற்றது

### சந்திரிகா நேற்று தகவல்

புதுடில்லி, மார்ச் 29

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை நாடு கடத்தும் விடயம் குறித்து இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன் தான் நடத்திய பேச்சின் போது எதுவும் இடம்பெறவில்லை என்றும், ஆனால் சாதாரண முறையில் நடைபெற்ற உரையாடலின் போது இவ்விடயம் இடம் பெற்றது என்றும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று பங்களாதேஷ் புறப்பட்டுச் செல்லும் முன்னர் புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 14 பொதுமக்கள் காணாமற்போன விவகாரம்:-

## மட்டு. ராணுவத்தினர் 179 பேருக்கு அடையாள அணிவகுப்பு உத்தரவு

கொழும்பு, மார்ச் 29

1993- பெப்ரவரி 17- ஆம் திகதியன்று மட்டக்களப்பு, கித்துள் முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த 179 இராணுவத்தினரையும் அடையாள அணிவகுப்புக்கு சமுகமளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பிரிகேடியருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மட்டக்களப்பு மேலதிக நீதிவான் திருமதி சி. சந்திரமணி விடுத்துள்ளார்.

அடையாள அணிவகுப்பு தினம் நேற்று ஆகும்.

17-02-93 எறாவூர் வண்ணாத்தி ஆறு கிராமத்தைச் சேர்ந்த 14 பொதுமக்கள் காணாமற் போயுள்ளனர்.

சப்பாத்திவெளி நெல்வயல்களில் அறுவடை செய்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் செனட் சபை அமைக்க அரசு முடிவு!

கொழும்பு, மார்ச் 29
இரு சபைகள் கொண்ட நாடாளுமன்ற ஆட்சிமுறைத் திட்ட யோசனை ஒன்றை, அரசமைப்பு சீரமைப்பு சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்க அரசு முடிவு செய்திருப்பதாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

அரசமைப்பு சீரமைப்பு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னால்சாட்சியமளித்த பலகட்சிகளும் இரண்டாவது சபை அமைக்கக் கோரியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இக்கட்சிகளின் விருப்பத்தை ஆராய்ந்த அரசாங்கம் இரண்டாவது சபை அமைப்பதில் பொது இணக்கம் ஏற்பட்டிருப்பதை கவனத்தில் எடுத்திருக்கிறது.

அமெரிக்காவில் இருப்பது போன்று ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சம எண்ணிக்கையான செனட்டர்கள் தெரிவு செய்யப்படும் யோசனை ஒன்றை அரசு முன்வைக்க விருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கு மேலதிகமாக பத்து விதமான செனட்டர்களை ஜனாதிபதி நியமிப்பார்.

தொழில்சார் மற்றும் கல்விசார் சேவைகள் மூலம் நாட்டுக்கு உழைத்த பெரியோரே ஜனாதிபதியால் இப் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள் என்றும் —

அவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடமாட்டார்கள் என்றும் —

அமைச்சர் மேலும் சொன்னார்.

இரண்டாவது சபை தோற்றுவிப்பதன் மூலம் இறுக்கிப் பிடிக்கும் நிலை ஏற்படாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காக —

அரசமைப்பு விவகாரம் மற்றும் அரசுக்கும், மாகாணங்களுக்கும் இடையிலான விவகாரங்கள் ஆகியவற்றை மட்டுமே கையாளும் வகையில் செனட்டை (முதவையை) கட்டுப்படுத்தவும் அரசு யோசிப்பதாகவும் அவர் சொன்னார். (உ.)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 29
தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய மகோற்சவம் இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து ஏப்ரல் 14ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [இ-14]

## சுகாதாரமற்ற பாண் பறிமுதல்

தென்மராட்சி, மார்ச் 29
கைகால்களில் அவியல் நோய் உள்ள ஒருவரால் மந்திகையிலிருந்து விற்பனைக்கென கொண்டு வரப்பட்ட பாண், மிருசுவிலில் கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகரால் பறிமுதல் செய்யப்பட்டது.

சுகாதாரம் பேணப்படாமையாலேயே இப்பாண் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொடிகாமம் நகர்ப் பகுதியில் சுட்டுத் துண்டு இல்லாமல் விற்பனை செய்யப்பட்ட பட்டர் பாணும் பொது சுகாதாரப் பகுதியால் கைப்பற்றப்பட்டது. [இ-14-117]

## ஆமைமூரிகள் அதிகரிப்பால் மீனவர்கள் பெரும் பாதிப்பு

குருநகர், மார்ச் 29
பூநகரி — பள்ளிக்குடா கடல் பகுதியில் ''ஆமைமூரி'' அதிகளவில் வளர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மீனவர்கள் கடலில் இறங்கித் தொழிலில் ஈடுபட முடியாதிருப்பதாகவும் கால்களில் குத்தும் ஆமைமூரிகள் அகற்ற முடியாதவாறுநெருங்கி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரிப் பகுதியில் படையினர் நிலை கொண்டதை அடுத்து, அப்பிரதேச கடற்பகுதியில் சனநடமாட்டம் குறைந்துள்ளமையே இப்பகுதி கடலோரங்களில் ஆமை மூரிகள் அதிகமாக பெருகியுள்ளமைக்கு காரணம் என்று தெரிவிக்கப் படுகின்றது. [இ-14-51]

## புலிகளின் குரல் வானொலியில்

29 — 03 — 1995
புதன் இரவு
★ 8-02 — குயிலோசை— வேலணையூர் சுரேஸ் எழுதிய ''அன்னைமடி என்ன சுகம்'' கிராமிய நிகழ்வு
★ 8-20 — வாத்தியகானங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் — சிவசக்தி எழுதிய ''இப்போது புரிந்தது'' என்பன இடம்பெறும்

30 — 03 — 1995
வியாழன் காலை
★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
29 — 03 — 1995
புதன் மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — பொன்விளையும் பூமி
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — கேள்வி பதில்— விளையாட்டுத் தொடர்பானவை
★ 6-25 — என் தெரிவு
★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## பாடசாலை சிற்றூர்தி சேவை குறித்து முறைப்பாடு

பருத்தித்துறை - உடுத்துறை பாதையில் சேவையில் ஈடுபடும் காலை, மாலை நேர பாடசாலை சிற்றூர்திச் சேவை ஒழுங்கீனத்தினால் ஆசிரியர்கள், மற்றும் அரச திணைக்கள ஊழியர்கள், பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாவதாகப் புகார் செய்யப்படுகின்றது.

இச் சேவை முன் அறிவித்தல் எதுவுமின்றி நிறுத்தப் படுவதினால், ஆசிரியர்களும் மற்றும் அரச ஊழியர்களும் வீதியிலும், பஸ்தரிப்பு நிலையங்களிலும் தவங்கிடந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை அடிக்கடி ஏற்படுகின்றது.

தனியாருடைய சிற்றூர்திகள் இச் சேவையில் ஈடுபடும் போதே, இச் சேவைகள் தடைப்படுவதாகக் கூறப்படுகின்றது. (இ-173)

## இலங்கையில் தென்கிழக்கு கரையில் எண்ணெய் வளம்

### அகழ்வு வேலைகளுக்கு ஆஸி உதவும்

கொழும்பு, மார்ச் 29
இலங்கையின் தென் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் எண்ணெய்வளம் இருப்பது தொடர்பான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அது பற்றிய அகழ்வுகளில் உதவ ஆஸ்ரேலிய அரசு முன்வந்துள்ளது.

இத்தகவலை— இது பற்றிய அகழ்வுகளில் ஈடுபட்டு எண்ணெய்வள பிரதேசங்களை கண்டுபிடித்த பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் புவியியல் பேராசிரியர் பி. டபிள்யு விதானகே தெரிவித்துள்ளார்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்ட, எம்பிலிப்பிட்டிய, யாவ, குமண ஆகியபிரதேசங்களிலே இவ்வாறு எண்ணெய் வளம் இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும்—

தாம்இதுதொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளை ஜனாதிபதிக்கும், எரிபொருள் மின்சக்தி அமைச்சருக்கும் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். [இ-5]

## யாழ்ப்பாணம் வரவிரும்பும் சிங்களடாக்டர்

கொழும்பு, மார்ச் 29
திருகோணமலை வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியநிபுணர் டாக்டர் குமார் பெர்னாண்டோ யாழ் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.

பெரும்பான்மை இனத்தவரான இவர் யாழ்ப்பாணத்தில் பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளதையடுத்தே இந்த இடமாற்றஉத்தரவு வழங்கப்பட இருப்பதாக கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. [இ-3]

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 29
தெல்லிப்பழை, தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலைய மைதானத்தில் அதிபர் திரு. சி. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் வந்து கொள்வார். (இ-14)

## நூல் வெளியீடும் இசை அரங்கும்

கவிஞர் 'முருகு' வின் நல்லைக் கந்தன் பாமாலை என்னும் நூல் வெளியீடும் இசை அரங்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளன.

பல்கலைப் புரவலர் நவாலியூர் நா. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்தபரமாச்சாரிய சுவாமிகளும், மதிப்பீட்டுரையை இயலிசைவாரிதி ந. வீரமணி ஐயரும் வழங்குவார்கள்.


சங்கீத பூஷணம் எஸ். பாலசிங்கம் நூலை வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து இசைக்கலாவித்தகர் செல்வி. ராதாதேவி சபாபதியின் இசை அரங்கு இடம்பெறும். (இ-14)

---

## "மகரயாழ்" விருதை

அலங்கரிக்கும்



வைத்திய கலாநிதி
**து. வி. ஜெயகுலராஜா**

மகரயாழ் விருது பெற்ற
வைத்திய கலாநிதியே
வாழ்த்துகின்றோம் உம்மை
வளமாக வாழ்கவென்று
நீவிர் செய்யும் நற்பணிகள்
மேன் மேலும் தொடர் து - செல்ல
பல்லாண்டு வாழ்க வென
வாழ்த்துகின்றோம்.

**புதிய உயர் கல்லூரி**
அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

ஆரியகுளம் சந்தி.
யாழ்ப்பாணம். [சி/647]

---

## அகில இலங்கை கம்பன் கழகத்தின் 1995 ஆம் ஆண்டிற்கான

★ மகரயாழ் ★

விருது பெறும்
வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா
அவர்களுக்கு

எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

மானிப்பாய் வை எம். சி. ஏ.
ஆளுநர் சபை உறுப்பினர்கள்
ஊழியர்கள், அங்கத்தவர்கள்.

[சி856]

---

புதுக்குடியிருப்பு – முல்லை
பங்குக் கலைஞர்களால்

## யாழ். திருமறைக் கலாமன்றத்தின்

ஆதரவில் மேடையேறுகிறது

# பலிக்களம்

(ஆண்டவரின் திருப்பாடுகளின் காட்சி)

இடம்: றோ. க. பாடசாலை மைதானம்
புதுக்குடியிருப்பு

காலம்: **31 – 03 – 1995**
வெள்ளிக்கிழமை

நேரம்: இரவு **7 30** மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தையர்,
பங்குமக்கள்.
[சி-852]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 23 – 05 – 1917
மறைவு: 27 – 02 – 1995

**அமரர் தம்பர் கந்தையா**
(கணேஸ்வரம் அளவெட்டி)

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.''

எங்கள் அன்பு அப்பாவே! கனடாவில் சிவராத்திரி தினத்தன்று சிவபதம் எய்திய உங்கள் உருவை எம்மால் காணமுடியவில்லையே! உங்கள் உரு ஒய்ந்து முப்பத்தியொரு நாட்கள் மறைந்தாலும், ஓராயிரம் ஆண்டுகள் ஆறாது எம் துயரம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அவரது பிரிவால் துயருறும்:
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

''பொன்னகம்'',
தாவடி. (35938)

---


## A/L 95

மீட்டல்

கிறிஸ்தவம்
Mrs. A. மல்லிகா
நாடகமும்
அரங்கியலும்
Mr. எச் விஸ்
தமிழ்
Mr. தாஸ்

## A/L 95

அளவையியல்
Mr. R.P. சர்மா

SHAMROCK
யாழ். சுண்டுக்குளி
[35942]


---

## 45 -ம் நாள் நினைவஞ்சலி

**தேவதாஸ் ஸ்ரீதாஸ்**

தோற்றம்: 16-12-1978
மறைவு: 13-02-1995

கண்ணில் தெரியுது தோற்றம்
கருத்தில் நிறையுது கலக்கம்
விண்ணில் வாழ்வை விடுத்து
மண்ணில் வாழ வாராய்!

குடும்பத்தினரும்,
நண்பர்களும்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (35947)

---


வெலிங்டன் சந்திக்கருகில்!

# UNIKCO COMPUTER CENTRE

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
★ BASIC ★ LOTUS 1–2–3
★ PASCAL ★ dBASE iii PLUS
★ WORD PROCESSING (Wordstar Rel 5.5)

ஆரம்பம்: **03 - 04 - 1995**

மேலும்
COMPUTER PRINTING (Letter, Graphs)
செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு:
★ கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்.
★ 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத செய்முறைப் பயிற்சி.
★ தமிழில் விளக்கங்கள் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்கட்கு:
37, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/646]


---


தமிழீழத்தின் திக்கெட்டிலுமுள்ள
மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற

## ராசி பட்டுச் சோலையின் ஓர் அறிவிப்பு

எட்டாம் அகவை தொடக்கத்தில் மட்டில்லா மகிழ்வு கொள்ளும் பட்டுச் சோலையாம் ''ராசி'' கட்டிலடங்கா தன் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறும் இந் நன்நாளில்.

இந் நாளை சிறப்பிக்கும் வண்ணம்
ஆதரவற்ற சிறார்களின்
வளர்ச்சி நிதிக்காக
ராசி பட்டுச் சோலையின்
ஆதரவுடன் நடைபெறவிருக்கும்

**உதைபந்தாட்டசுற்றுப் போட்டி II**
(ஏப்ரல் 1995)

சிறப்புற நடத்தப்படவுள்ளதால் இப்போட்டிகளில் பங்கு கொள்ளவிருப்பமுடைய கழகங்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து **10-04-95**க்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுகிறோம்.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் ராசி பட்டுச் சோலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நன்றி
ராசிபட்டுச்சோலை
70, 71A, நவீன் சந்தை,
யாழ்ப்பாணம்
(சி-855)


---


## மொழிபெயர்ப்பாளர் பதவிவெற்றிடம்

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றிற்கு ஆங்கில நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைச் செய்திகள் ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும், எனினும் ஆங்கில மொழித் தேர்ச்சியுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 10-04-1995.

தொடர்பு:-
C/o உதயன்,
விளம்பர இலக்கம் 772
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(35939)


---


## G.A.Q. [Ist. in Arts]

**1St. IN COM.**
(யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரி)

★ மேற்கூறப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
★ இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(சி-648)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைநீக்கப்பட்ட பொருள்களுக்கும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 29

தடைநீக்கப்பட்டதாக அரசு வர்த்தமானி மூலம் அறிவித்த சில பொருள்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு தற்போது அனுமதி மறுத்துள்ளதாக தெரியவந்தது

கம்யூட்டர்கள், 1.5 கே. விக்கு மேல்பட்ட ஜெனரேட்டர்கள், அச்சு இயந்திரங்கள் போன்றவற்றுக்கே பாதுகாப்பு அமைச்சு தற்போது அனுமதி மறுத்து வருவதாகத் தெரியவந்தது.

இந்தப்பொருள்கள் மீதான தடையை அரசு நீக்கிய போதும், இந்தப் பொருள்கள் வடக்கே எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி தேவை என்று அமைச்சு அதிகாரிகள் தற்சமயம் அறிவித்துள்ளனர்.

இந்தப்பொருள்களை கப்பலில் எடுத்துவர அனுமதி கோரினாலும், அதற்கு பாதுகாப்பு அமைச்சு மறுப்பு தெரிவித்துள்ளது. (இ-3)

## கண்டி குண்டு வெடிப்பில் பெண் ஒருவர் பலி

### சப் இன்ஸ்பெக்டர் கைதுண்டிப்பு

கொழும்பு, மார்ச் 29

கண்டி அரப்பொலவில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஓர் பெண் கொல்லப்பட்டார்.

அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் குண்டு வெடித்தது.

அச்சமயம் அந்த வீட்டில் இருந்த பெண் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் —

அங்கு இருந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் கை துண்டிக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட பெண் மனித உரிமைகள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டதாகவும் —

கிரனேட் ஒன்றே வெடித்தது என்றும் — மற்றொரு செய்தி தெரிவித்தது. (இ-3)

## பிரதிப் பதிவாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகப் பணியாற்றிவந்த திரு. ரி. காசிநாதர் பிரதிப்பதிவாளராக பதவி உயர்வுடன் நியமனம் பெற்றுள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கடந்த 20ஆம் திகதி முதல் இந்நியமனத்தை வழங்கியுள்ளது. [இ-3]

## 46 ஆசிரியர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 29

ஊவா மாகாணத்தில் 46 ஆசிரியர்கள் வேலையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்து இவர்கள் வேலை பெற்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான விசாரணைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன (இ 3)

## ரூ. 55கோடி இலங்கைக்கு கடன்

கொழும்பு, மார்ச். 29

குவைத் அரபு பொருளாதார அபிவிருத்தி நிலையம் சுமார் 55கோடி ரூபாவினை இலங்கைக்கு கடனாக வழங்கியுள்ளது.

இந்த நிதி பாலங்களை புனரமைக்கவும், பழுது பார்க்கவும் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# அகதிகளை திருப்பி அனுப்புவதில் ஐரோப்பிய நாடுகள் தீவிரம்

கொழும்பு, மார்ச் 29

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் முயற்சிகளில் அந்த அரசுகள் தீவிர அக்கறை காட்டி வருகின்றன.

இவ்வகையில் சுவிற்சர்லாந்து அரசும் இது தொடர்பான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

சுவிற்சர்லாந்தில் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நிலையில், நாட்டை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை இரவோடு இரவாக நாடு கடத்தும் நடவடிக்கைகளில் அந்நாட்டு அரசு ஈடுபட்டுள்ளது.

இவர்களில் பலருக்கு, அந்நாட்டு அரசு தற்காலிகமாக வழங்கிய 'விசா' வின் காலம் இன்னமும் முடிவடையவில்லை.

அவ்வாறு இருக்கவும் சுவிற்சர்லாந்து அரசு இவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளது.

இதனால் அங்குள்ள ஈழத் தமிழர்கள் வேறு நாடுகளில் தலைமறைவாகி வருவதாகத் தெரியவருகிறது.

அதே சமயம் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான காலக்கெடு ஒன்றை நெதர்லாந்து அரசும் விரைவில் விதிக்கவுள்ளது.

பிரான்ஸ் அரசாங்கம் புதிதாக நாட்டுக்கு வருபவர்களை பெரும்பாலும் நிராகரித்து வருகின்றது.

நோர்வே அரசு, நிராகரிக்கப்பட்ட அகதிகளை திருப்பி அனுப்புவது என்று தான் எடுத்த முடிவை மாற்றப் போவதில்லை என்றும்—

உடனடியாக 200 பேரை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டதாகவும் கூறியுள்ளது. (இ-5)

## சிறுதானியப் பயிர்கள் வரட்சியால் அழியும் நிலை

அராலி, மார்ச் 29

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள எள் மற்றும் சிறுதானியப் பயிர்கள், கடும் வரட்சியால் அழிந்து போகும் நிலையை தடுப்பதற்கு உடனடி நீர்ப்பாசனம் செய்யவேண்டி உள்ளது.

இதற்கான மண்ணெண்ணையை விவசாயிகளுக்கு வழங்குமாறு, பிரதேச செயலரிடமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடமும் கோரப்பட்டுள்ளது. [இ-14-12]

## பொது கிணறுகள் இலவசமாக சுத்திகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலவசமாக பொதுக்கிணறுகளை இறைக்கும் யாழ். மிட்— ரவுண் றோற்றறக் கழகதிட்டத்தின் கீழ் நாவாந்துறை— நீகன்நகர் பகுதியில் உள்ள இரண்டு பொதுக் கிணறுகள் இறைக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டன. [இ-14]

## மோட்டார் சைக்கிள் கொண்டுவரக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மட்டுமே கப்பலில் மோட்டார் சைக்கிளை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதுவும் அரச திணைக்கள தலைவர் மற்றும் அரசாங்க அதிபரின் சிபார்சுடனேயே மோட்டார் சைக்கிளை கப்பலின் கொண்டு வர பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கும்

தனியார் மற்றும் வர்த்தகர்கள் தங்கள் தேவைக்கு மோட்டார் சைக்கிளை கப்பலில் வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு அனுமதி வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது. [இ-17]


பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

ராஜன் சைக்கிள் வேக்ஸ் ஆதரவில் நடத்தும்

"உதயணன்" கிண்ணத்திற்கான

மாபெரும் கரப்பந்தாட்டச் (செற் அப்) சுற்றுப் போட்டி - 1995

1. போட்டிகள் வழமைபோன்று யாழ். மாவட்ட ரீதியில் நடைபெறும்.
2. போட்டியின் அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் மின்னொளியில் நடைபெறும்.
3. விண்ணப்ப முடிவு திகதி: 05 — 04 — 1995

மற்றும்
வடமராட்சிக்கு உட்பட்ட
கழகங்களுக்கு இடையேயான

1. மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி
   (11 பேர் கொண்ட 20 ஓவர்)
   (6 பேர் கொண்ட 5 ஓவர்)
2. கபாடிச் சுற்றுப் போட்டி
   மேற் பிரிவு — 55 kg மேற்பட்டது
   கீழ்ப் பிரிவு — 55 kg கீழ்ப்பட்டது

விண்ணப்ப முடிவு திகதி: 05 — 04 — 1995

உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இ. இராசதுரை, ராஜன் சைக்கிள் வேக்ஸ், பருத்தித்துறை.
செயலாளர், ஐக்கிய வி. கழகம், பருத்தித்துறை.

தரமான துவிச்சக்கர வண்டிகளுக்கும், ஆடம்பர அழகு சாதன பொருள்களுக்கும் நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்:
ராஜன் சைக்கிள் வேக்ஸ் பருத்தித்துறை.

விளம்பரதாரர்:
ராஜன் வீடியோ மூவிஸ்
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
[சி-848]


# சமாதான முயற்சியை முன்னெடுக்க இந்தியா அனுகூலமாக இருக்கிறது

### பங்களாதேஷ் புறப்படு முன் சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

'இந்தியாவில நடத்திய பேச்சுக்கள் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அனுகூலமாக அமைந்தன'.

இந்தியாவில் மேற்கொண்ட நான்கு நாள் விஜயத்தின் முடிவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பங்களாதேஷுக்கு செல்ல முன்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் நடத்திய பேச்சுக்களின்போது, நாம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு முழு ஆதரவை நல்லெண்ண அடிப்படையில் வழங்க இந்தியத் தலைவர்கள் முன்வந்தனர்.

எமது பிரச்சினையை நாம் பேச்சுமூலம் தீர்வு காண வேண்டும் என்ற விருப்பத்தையே அவர்கள் வெளியிட்டனர்.

இந்திய விஜயம் மிகப்பயனுள்ளதாக அமைந்தது.

இப்படி அவர் கூறினார். [இ-3]

# கிழக்கில் பொலீஸார் - படையினர் கூட்டாக கடமையில் ஈடுபடுவர்

### பொலீஸ்மா அதிபர் உத்தரவு

கொழும்பு, மார்ச் 29

கிழக்கில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட படையினருடன் கூட்டாக கடமையில் ஈடுபடுமாறு பொலீஸாருக்கு பொலீஸ்மா அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த பொலீஸ்மா அதிபர் பிராங் டீ சில்வா பொலீஸாருடன் கலந்துரையாடினார்.

பொலீஸ் நிலைய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்ட அவர் அங்கு பொலீஸ் அதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்ந்தார்.

கிழக்கில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பாதுகாப்பு படையினருடன் கூட்டாக கடமையில் ஈடுபடுமாறு பொலீஸாரை அவர் கேட்டுக் கொண்டார். (இ-3)

# கிளிநொச்சி விவசாய பீடத்துக்கான கணணிகளுக்கு அனுமதி மறுப்பு

யாழ். பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சியில் உள்ள விவசாய பீடத்துக்கு கனேடிய உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 15 கணணிகளை எடுத்து வர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க மறுத்து விட்டதாக தெரியவந்தது.

விவசாய பீடத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் அலுவலக வேலைகளுக்காக இந்த கணணிகள் வழங்கப்பட்டிருந்தன.

இவை கடந்த மாதம் கொழும்பு வந்து சேர்ந்த போதும், அவற்றை கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

அதேவேளை— யாழ் பல்கலைக்கழகத்துக்கு கடந்த ஐந்து மாதத்துக்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட 15 கணணிகளும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததால் கொழும்பில் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# 83ஆம் ஆண்டு இனக்கலவரம் பற்றி விசாரிக்க ஆணைக்குழு வேண்டும்

### கருத்தரங்கில் வலியுறுத்து

1983ஆம் ஆண்டுஇனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள்தொடர்பாக விசாரிக்க இதுவரை எவரும் முன்வரவில்லை; இது தமிழ் மக்களுக்கு எதிரான அநீதியாகும்.

விவசாய தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர். எம். கிருஸ்ணசாமி இவ்வாறு குற்றஞ்சாட்டி உள்ளார்.

அண்மையில், பதுளையில் நடத்த கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த அனைத்து நடவடிக்கைகளையும் விசாரிக்க விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று 1983ஆம் ஆண்டில்இடம்பெற்ற இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பாக விசாரணை [illegible] விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

இன்று அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன;

இலங்கை வாழ். இந்திய வமசாவழியினர் தொடர்பாக — இம் மக்களுக்கு அவசியமான — நியாயமான விடயங்கள் அரசமைப்பில் சேர்க்கப்படவேண்டும்.

அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படாவிட்டால் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி மலையக அமைப்புகள் தீர்மானிக்கவேண்டும்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)


அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995 ஆம்ஆண்டிற்கான
மகரயாழ் விருது பெறும்



வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா
அவர்களுக்கு
எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

மேகாஸ் வீடியோ
58, குகன் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
N. S. இரவீந்திரன்
[35941]



கொழும்பு
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சமிதியின்
வெள்ளிவிழா போட்டிகள்

இலங்கையில் ஸ்ரீ சாரதா சமிதி நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது அதையொட்டி ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சமிதியினர் மாணவர்கள் மத்தியில் நாடளாவிய ரீதியில பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடாத்தவுள்ளனர். இப்போட்டிகளில் பாடசாலைகளில்/ அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் பங்குபற்றலாம்.

எதிர்வரும் மே மாதம் கடைசி வாரத்தில் மாவட்ட ரீதியிலான போட்டிகள் நடாத்தப்படும். இறுதிப் போட்டிகள் ஜூன் மாதம் கொழும்பில் நடைபெறும்.

போட்டி விவரங்கள் பின்வருமாறு:

கீழ்ப்பிரிவு — பங்குபற்றும் மாணவர்கள் ஆண்டு 4, 5, 6.
மத்திய பிரிவு — பங்குபற்றும் மாணவர்கள் ஆண்டு 7, 8, 9.
மேற் பிரிவு — பங்குபற்றும் மாணவர்கள் ஆண்டு 10, 11, 12.

பேச்சு:

விடயத் தலைப்பு கீழ்ப்பிரிவு — 3 நிமிடம்
1. அம்மா என்றொரு தெய்வம்
2. அனனை (சாரதாமணி அம்மையார்) ஆற்றிய தொண்டு
3. அன்னை காட்டிய வழி

விடயத் தலைப்பு மத்திய பிரிவு — 5 நிமிடம்
1. அன்னை காட்டும் அருள்நெறி
2. குருதேவரும் அன்னையாரும்
3. அன்னையார் வாழ்வில் - தியாகமும் சேவையும்

விடயத் தலைப்பு மேற்பிரிவு — 7 நிமிடம்
1. அன்னையாரின் ஆத்மீக நெறி
2. பெண்களும் ஆன்மீக நிலையங்களும்
3. சமயப்பணிகளில பெண்கள்

குறிப்பு: போட்டிகள் பாடசாலை நாட்களில் நடைபெற மாட்டா.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
(சி-854)



பொதுக்கூட்ட அறிவித்தல்

25 - 02 - 1995 ஆம் திகதி நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட நல்லூர் சட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 02 - 04 - 1995 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 - 00 மணியளவில் ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ம. தவராஜ்
செயலாளர்.
[35931)



ஆழ்ந்த அனுதாபங்கள்

வடமராட்சிக் கம்பன் கழக அமைப்பாளர்
திரு. ப. தயாபரன் அவர்களின் தந்தையாரின்

திரு. இ. பஞ்சாட்சரம்

மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அகில இலங்கைக் கம்பன் கழகம்,
திருகோணமலைக் கம்பன் கழகம்,
காரைநகர்க் கம்பன் கழகம்,
வைரெழுக் கம்பன் கழகம்,
கொழும்புக் கம்பன் கழகம்.
[சி-851]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

ஒரு மாதம் நிரம்பிய பூச்சி அகற்றப்பட்ட நல்ல இன அல்சேஷியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நாதன் மருந்தகம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (35927)

**வீடு விற்பனைக்கு**

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு க. கனகரட்னம், இல. 547, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [35929]

**காணி விற்பனைக்கு**

கஸ்தூரியார் றோட்டில் ராஜா தியேட்டர் அருகாமையில் அரை [½] பரப்பு காணி, கிணறு வசதியுடன். தொடர்பு: திரு. இராஜநாயகம், சிக்கந்தன் லேன், பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. [35933]

**கோழிக்குஞ்சு விறபனை**

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 29-3-95 இன்று கோல்டின் கொமற் பேட்டுக்குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம். சி. குலசிங்கம், இல 9. நக்கா வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம் (Barக்கு முன்பாக) [35932]

**கோழிக் குஞ்சுகள்**

துரித வளர்ச்சியடையும், [Loman] சேவல் குஞ்சுகள் 30-03-95இல் விநியோகிக்கப்படும். குஞ்சொன்றின் விலை ருபா 15/- முன் கூட்டியே பதிவு செய்தவர்களும் பெற்றுக்கொள்ளலாம். மல்வம் விதியூடாக சிங்கம் வீதி. உடுவில். [35892]

**வாழ்த்து மடல்கள்**

புத்தாண்டு வாழ்த்து மடல்கள், இரகுநாதையர் பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும். 94ஆம் ஆண்டு உயர்கல்வி வெளியீடு. விலங்கியல் A/L பாஸ் பேப்பர்' வர்த்தகம் நிதியியலும் வெளிவந்து விட்டது. பசுமிலன், ஸ்ரீகாந் யாழ் நல்லூர் [சி 644]

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

மோட்டார் சைக்கிள் ஒரு தொகை விற்பனைக்கு உண்டு. முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை ''ஜனமித்ர'', பிறவுண் வீதி (கலட்டிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம். [35924]

**சீயாக்காய்ப் பவுடர்**

காவேரி சீயாக்காய் பவுடர் ஆறு வகை இயற்கைப் பொருள்களால் தயாரிக்கப் படுவது உஷ்ணத்தினால் வரக்கூடிய கண்கட்டு, கண் நோய், கொப்பளிப்பான் போன்ற வியாதிகள் வராமல் இருப்பதற்கு உடம்பை குளிர்மையாகவைத்திருப்பதற்கும் கிழமை தோறும் தவறாமல் காவேரி சீயாக்காய் பவுடரை வாங்கிப் பாவியுங்கள். (35709)

**தேவை**

எமது கலை நிலையத்தில் 30-45 வயதுடைய [O/L] தராதரம் உள்ள பகுதி நேர ஆண் பணியாளர் தேவை. தொடர்பு: 31-3-95 காலை 10-00 மணி எடிசன் அக்கடமி. இல. 411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [சி-849]

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

மானிப்பாய்க்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையிலுள்ள பிரதான வீதியில் சிறிய வானொலிப் பெட்டியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். கு. ராமலிங்கம், இலங்கை வங்கி, காங்கேசன்துறைக் கிளை, மானிப்பாய். [8456]

**வகுப்புகள்**

கேக் ஐசிங், மாச்சினி அலங்காரம், Fondant Icing, ஒப்பனைக்கலையும், தலையலங்காரம். பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் [Silk Ribbon, Stocking Net, Bouquets] புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது. தொடர்பு: Yogi Home Science Academy நயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர். (சி-634)

**கணக்கியல்**

G. C. E. A/L கணக்கியல் Past Paper 1980—1994வரை சரசு பப்பிளிக்கேசன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-641]


## உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 29 ஊர்காவற்றுறை ப.நோ. கூ. சங்கத்தின் பாவனையாளர்கள் தமது 23''பி'', 24 ஏ' உலர் உணவு முத்திரைக்கான பொருள்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஐ)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28 — 12 — 1952

உதிர்வு: 29 — 03 — 1994

**அமரர் செல்லத்துரை சிவபாலன்**

(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

அன்பாய் வாழ்ந்து அமரர் ஆன உம்மை என்றும் நினைக்கும்,

மனைவி, பிள்ளைகள், தாயார், உடன்பிறப்புக்கள்.

மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். [35923]

## நீங்காத நினைவலைகள்



ஜனனம்: 24 — 06 — 1940

மரணம்: 20 — 03 — 1985

**அமரர் நடராசா கருணானந்தன்**

திதி: 29 — 03— 1995

பாசத்தை பொழிந்து நேசத்துடன்
எம்மை ஆளாக்கிய அப்பவே!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
பத்தாண்டு சென்றாலும் நினைவுகள்
என்றும் எமது மனத்திரையில்
பசுமையாக நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள்,
உறவினர்.

மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம். [35921]

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 05 — 09 — 1930

உதிர்வு: 29 — 03 — 1987

**அமரர் இளையையா கதிரவேலு**

(அர்மான்)

[29/4445 மினிபஸ் உரிமையாளர்]

நாடும் வீடும் போற்ற மாண்போடு வாழ்ந்தாய்,
வானில் வந்த பகைவர் உனை வஞ்சகமாய்க் –
கொன்றார்,
நீபட்ட வேதனையோ அம்மம்மா ...
ஆண்டுகள் எட்டு கழிந்ததையா ... ஆனால் உன்
நினைவுகள் என்றும் எம் இதயத்தை விட்டு –
அகலாதய்யா.

உன் அன்பின் துணைவி,
பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

''யோகவாசம்''
சந்தை வீதி, தெல்லிப்பழை.
தற்போதைய முகவரி: ஒட்டக்கரை – சங்கானை.

உ

கந்தர்மடம் – செட்டியதாழ்வு
அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர்
தேவஸ்தானம்

## மண்டலாபிஷேக 8 ஆம் நாளும் மகோற்சவ தினமும்

காலம்: (இன்று) 1995 - 03 - 29 புதன்கிழமை மாலை 6-00 மணி

இடம்: ஆலய முன்றில்

### விசேட நிகழ்ச்சிகள்

7-00 மணி கவியரங்கம்

விடயம்:
'செந்தமிழ் ஈழத்திசைகள்யாவும் சிவக்கும் இந்துமா கடலில் இன்னொரு நாடு பிறக்கும்'

தலைவர் திரு. பொன். கணேசமூர்த்தி

கவிஞர் காரை. எம். பி. அருளானந்தன்
'' செல்வி ரி. குயின்சைலா
'' செல்வி எம். விஜயமதி
'' திரு. ஐ. கேதீஸ்வரன்
'' திரு. இருவை. ஜீவமோகன்
'' திரு. ரி. வேல்நம்பி

8-00 மணி முத்தமிழ்ப் பட்டிமன்றம்
25 ஆவது தடவையாக அரங்கேறுகின்றது.

✶ தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி இருப்பது யார் பாடலில்?

| கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | கவியரசு கண்ணதாசன் |
|---|---|
| கனக. நாகேஸ்வரன் M. A | எம்.எஸ் தயாளன் B.A |
| செ. சத்தியமூர்த்தி B. Sc | எஸ் கணேசலிங்கம் B A |
| பொன் மதிமுகராஜா J P | க. கனகரத்தினம் |
| க. திருநாவுக்கரசு M. A | சைவப்புலவர் குணபாலசிங்கம் B A |

நடுவர்: திரு. அ. குமாரவேலு B.A

பட்டிமன்ற அமைப்பு: பொன் மதி முகராஜா (எம்.ஜி.ஆர் இல்லம், தாவடி)

★ தினமும் [1995-03-22 — 1995-04-02 வரை] இரவு 7 — 8 வரை
''தெய்வீகப் பேருரை''
இடம் பெறுகின்றது

விடயம்: **பெரியபுராணம்**

நிகழ்த்துபவர்:
வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

— பரிபாலனசபை.

இன்றைய விழா சிறப்புற வாழ்த்துவோர்;

**''துணிப் பூங்கா''**

இல: 158, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம். [35930]

## நிரு பட்டப்படிப்பு பிரிவு

கோண்டாவில்.

**G·A·Q· 1995** (யாழ்ப்பாணம்)

பொருளியல் — திரு. உதயன்
தமிழ் — திரு. குழந்தை
இந்துநாகரிகம் — திரு. சோதி
புவியியல் — திரு. வேலா

விரிவுரைகள் நடைபெறுவதால் அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

**G·A·Q· 1996** (யாழ். பேராதனை)

புதிய பிரிவு ஆரம்பம்:
**05 — 04 — 1995** (சி-816)

## பட்டப் படிப்புக்கள்

ஆரம்பம்: 05 - 04 - 95

G. A. Q. – 1995 (யாழ்ப்பாணம்)
G. A Q.( ) – 1996 (யாழ்.பேராதனை)
First In Com – 1995/96 (யாழ்ப்பாணம்)

பதிவாளர்
பட்டப்படிப்பு பிரிவு
**கலை வர்த்தகக் கல்லூரி**
**C. C. A.** யாழ்ப்பாணம்.

எமது விரிவுரையாளர் குழு

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
தமிழ் — திரு கணேஸ்
இ. நாகரிகம் — திரு ஜோதீஸ்வரன்

ஏனைய எல்லாபாடங்களுக்கான விரிவுரைகளும்நடைபெறும்.

குறிப்பு: முழுபாடத்திட்டமும், பூர்த்திசெய்யப்பட்டு மீட்டல் வகுப்பும் நடைபெறும்.



காரைநகர்
மணற்காடு முத்து மாரியம்பாள்
தேர் உற்சவ தினம்
(இன்று) 1995-03-29

## விடிவு தருவாய் அம்மா...

காரைநகர் உறைபவளே மாரியம்மா – ஊரை
கலகத்தால் பிரிந்துள்ளோம் மாரியம்மா
ஊரையாம் மறக்கவில்லை மாரியம்மா
உன்னருளால் வாழுகின்றோம் மாரியம்மா

போர் வேண்டாம் எங்கள் மண்ணில் மாரியம்மா–புதிய
புவனத்தை கண்டிடுவோம் மாரியம்மா
யாரையாம் நொந்திடுவோம் மாரியம்மா – எங்கள்
யாழ் மண்ணை வாழ்த்துகின்றோம் மாரியம்மா.

உன்பாதம் துணையெமக்கு மாரியம்மா – எல்லாம்
உன்செயலென் றுணர்ந்து கொண்டோம் மாரியம்மா
எம்மையெல்லாம் காத்தருள்வாய் மாரியம்மா–என்றும்
எண்ணிட நீ வைத்தருள்வாய் மாரியம்மா.

வேறு

காரை மண்ணில் நாங்கள்
கால்கள் பதிப்ப தெப்போ
தேரை இழுப்ப தெப்போ
தேவியைச் சுமப்ப தெப்போ.

ஏரைப் பிடித்து நாங்கள்
எள்ளை விதைப்ப தெப்போ
நீரை இறைத்து நல்ல
நெல்லைப் பெறுவ தெப்போ.

தேவி உன்னை என்றும்
தெளிவாய் காண வேண்டும்
கூவி அழைத்து எம்மை
கோயில் காண வைப்பாய்.

— கவிஞர். காரை. எம், பி. அருளானந்தன் —

இன்று [1995-03-29] புதன்கிழமை நல்லூர் மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் தேர் உற்சவ தினத்தினை யொட்டி முற்பகல் 11-00 மணியளவில் அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன அம்பாள் அடியார்கள் வருகை தந்து அம்பிகையை தரிசித்து அருள்பெற அழைக்கின்றோம்.

தேர் உற்சவ தின வழிபாடுகள் சிறப்புற வாழ்த்துவோர்

**திருமாட்டி புடைவைக் கடல்**
இல. 122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**கணேசன் பட்டுச்சோலை**
இல. 201, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம். [சி-850]

## ஜெனரேற்றர் இயக்குநர்

மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) இயக்குவதில் அனுபவம் உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எந்தவகை மின்பிறப்பாக்கியை இயக்குவதில் அனுபவம் உண்டு என்ற விவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களும், யாழ்.மாநகர சபை பகுதிக்குள் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 3 - 95

ஆளணி முகாமையாளர்
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அளவெட்டி தெற்கு டச்சு வீதியைச் சேர்ந்த
**அமரர் கந்தையா ஐயாத்துரை**

தோற்றம்: 15-05-1915

மறைவு: 27-02-1995

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மைப் பிரிந்து சென்றாலும் எங்கள் இதயங்களில் என்றென்றும் வாழ்வீர்கள்.

தங்கள் ஆத்மா நற்கதியடைய எல்லாம் வல்ல எம் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

சகோதரி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
நா. நடராசா,
பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (35920)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## புதிய மொந்தையில் பழைய கள்ளு!

கொழும்புப் பகுதியில் தமிழர்களைக் கண்டபடி கைதுசெய்யும் படலம் மீண்டும் ஆரம்பமாகி இருக்கிறது! இரவு வேளைகளில் தமிழர்களின் வீடுகளைச் சோதனை செய்து, அங்கு வசிப்போரைக் கைது செய்யும் 'பழையபணியில்' பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்!

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொழும்பு வாழ் தமிழர்கள் அனுபவித்த பெரும் இன்னல்கள் பொலீஸாரும், இராணுவத்தினரும் நடத்திய வீட்டுக்கு வீடு சோதனைகளும், கைதுகளும், விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டமையும், தடுப்புக்காவலில் நடத்தப்பட்ட சித்திரவதைகளும் ஆகும்.

தமிழர்கள் சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கப்பட்டு, வீடுகள், வீதிகள், தொழில் நிலையங்கள் என்று கண்ட கண்ட இடங்களிலும் கைது செய்யப்பட்டனர். இளைஞர்கள், வயதானவர்கள், ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி, பகல், இரவு, நடுச்சாமம், அதிகாலைப்பொழுது, துயிலும் நேரம், துயிலாத நேரம் என்ற கால வேறுபாடின்றி ஆயிரம் ஆயிரமாகத் தமிழர்கள் கொழும்பிலும் அதனை அண்டிய நகரங்களிலும் நீர்கொழும்பு போன்ற தூர இடங்களிலும் கைதுசெய்யப்பட்டனர்.

அவ்வாறு கைதானவர்கள் விசாரணை விளக்கம், எதுவுமின்றி, பொலீஸ் நிலையங்களிலும், தடுப்புக் காவல் முகாம்களிலும் சிறிய சிறிய அறைகளில் மந்தைப் பட்டிகள் போல பெரும் எண்ணிக்கையில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்தால், இந்த இன்னல் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையில், பொதுசன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்த கொழும்புத்தமிழர்கள் பலர். ஏழுமாத காலத்தில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்!

கொழும்பு வாழ் தமிழர்கள் தமது சொந்த நலன்களைக் கருதி ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதே வழக்கம்.

ஆனால் கடந்த வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல்களில் கொழும்புத் தமிழர் ஐ.தே.க.மீது வெறுப்புற்று நீலக் கட்சிக்கே வாக்களித்தனர். அந்தமாற்றத்துக்கானமுக்கிய காரணங்களில் பொலீஸாரும் படையினரும் நடத்திய கைதுகள், சித்திரவதைகளினால் அனுபவித்த கஷ்டமும் ஒன்றாகும்.

சிங்கள அரசாங்கம், அது எந்தக் கட்சியினுடையதாயினும், தமிழர்களைப் பொறுத்த வகையில் விமோசனம் இல்லை. எல்லாம் ஒன்றுதான் என்று நிரூபிக்கும் வகையில் புதிய அரசும் கொழும்புத் தமிழர்களைச் சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கத் தொடங்கிவிட்டது!

தமிழர்களுக்கு உரிமைகள், இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற நிலையிலிருந்து நீக்குதல் என்று சித்தாந்தம் பேசிக்கொண்டே, அவர்களின் நாளாந்த வாழ்வியல் உரிமைகளை முந்திய அரசு போலவே இந்த அரசும் மறுக்கத் தொடங்கியுள்ளது.

கொழும்பில் மட்டுமன்றி கிழக்கிலும், மலையகத்திலும் தமிழர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள்; காவலில் வைக்கப்படுகிறார்கள்; சித்திரவதை செய்யப்படுகிறார்கள். முன்னரைப் போலவே பொலீஸாரும், இராணுவத்தினரும் பணம் சம்பாதிக்க புதிய அரசும் வசதிசெய்து கொடுத்துள்ளது!

வடக்குத் தமிழர்கள் கொழும்பிலும் உரிமைகளுடன் வாழ்கிறார்கள்; வடக்கில் சிங்களவர்கள் வாழ முடியவில்லையே என்று ஒப்பிடுவோர், பொறாமைப்படுவோர் தமிழர்கள் தமது தாயகத்துக்கு வெளியே வாழ்வதற்காகக் கொடுக்கும் தண்டனையா இது?

எதுவோ, அரசு மாற்றம் தமிழர்களுக்கு விடிவு தராது. அது புதிய மொந்தையில் ஊற்றிய பழைய கள்ளே என்பது மீண்டும் உணர்த்தப்படுகிறது!

# இந்தியாவின் சமஷ்டி அரசமைப்பு முறை தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாகாது

*யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட முழுநிலா நாள் கருத்தரங்கில் —*

*'புதிய அரசாங்கத்தின் புதிய அரசமைப்பு விவகாரமும்ஈழத்தமிழர் பிரச்சினையும்' என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு ஆற்றிய உரையின் தொகுப்பின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது.*

*இந்த உரையின் தொகுப்பின் முதல் இரு பகுதிகள் ஏற்கனவே கடந்த 19ஆம் திகதியிலும், 27ஆம் திகதியிலும் உதயனில் வெளியாகியிருந்தன.*

புதிதாக ஓர் அரசமைப்பை உருவாக்கும் போது பாரம்பரிய அரசமைப்புகள் ஊடாக மட்டுமே சிந்திக்க வேண்டியதில்லை என்ற கருத்தினை சூடான் நாட்டில் அன்ஸானிய விடுதலை இயக்கம் முன்வைத்தது.

வெள்ளையர்கள் கூறுகின்ற கருத்துக்களையும், வெள்ளையர்களின் அரசுகளில் ஏற்

> **புதிதாக ஓர் அரசமைப்பை உருவாக்கும்போது பாரம்பரிய அரசமைப்புகள் ஊடாகச் சிந்திக்க வேண்டிய தில்லை என்ற கருத்தை சூடானில் அன்ஸானிய விடுதலை இயக்கம் முன் வைத்தது....**

படுகின்ற மாற்றங்களையும் தான் நாம் சட்டெனப் பார்ப்போம்.

ஆனால் இந்தப் புதிய கருத்து ஆபிரிக்காவில் முன் வைக்கப்பட்டது.

அன்ஸானிய விடுதலை இயக்கம் சூடானில் தனிநாடு கோரிப் போராடிய இயக்கம்.

அரசமைப்பு உருவாக்கம் குறித்த அதன் கருத்து அரசமைப்பு வரலாற்றில் ஒரு முக்கிய விடயமாக உள்ளது.

மரபு ரீதியான அரசமைப்புத் திட்டத்துக்கு முரணாக தமது புதிய தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஒரு அரசமைப்புத் திட்டத்தை முன் வைக்க முடியுமா என அன்ஸானிய விடுதலை இயக்கம் சூடான் இராணுவ ஆட்சித் தலைவரிடம் கோரியது.

பல நெருக்கடிகளின் மத்தியில், அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதுதான் ஒரே வழி என்ற முடிவுக்கு சூடான் இராணுவ ஆட்சித் தலைவர் வந்தார்.

அதன்படி ஒரு புதிய — திவிரமான — அரசமைப்புத் திட்டத்தை அவர் உருவாக்கினார்.

அந்த அரசமைப்பின் பிரகாரம் அன்ஸானிய விடுதலை இயக்கம் அன்ஸானியர்களின் தேசிய சக்தியாக அங்கீகரிக்கப்பட்டது.

ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் இரண்டு இராணுவம் இருக்க முடியாது. ஆனால் சூடானில் புதிய அரசமைப்பின் கீழ் இரண்டு இராணுவம் இருக்க உடன்பாடு ஏற்பட்டது.

நீங்கள் — அராபியர்கள் — பெரிய இனம். எனவே எந்த நேரமும் வந்து எங்களை நீங்கள் அழித்து விடலாம். எனவே எமது பிரதேசத்தில் உங்கள் இராணுவத்தை வைத்திருக்க அனுமதிக்க மாட்டோம் என அன்ஸானிய விடுதலை இயக்கம் கூறியது.

எமது பிரதேசத்தில் எமது விடுதலை இயக்கத்தின் இராணுவம்தான் இருக்க வேண்டும். இதை ஏற்றுக் கொள்வீர்களா என்றும் அன்ஸானியர்கள் கேட்டனர்.

சூடானிய ஆட்சித் தலைவர் அதை சிறு மாற்றங்களுடன் ஏற்பதாக அறிவித்தார்.

அதாவது — உங்களின் இராணுவத்தை சூடானின் தேசிய இராணுவமாக நாம் அறிவிக்கிறோம். அதை நீங்கள் ஏற்க வேண்டும். அதை நீங்கள் ஏற்றுக் கொண்டால் சூடானிய இராணுவத்தின் ஒரு சிறு அணியினர் அன்ஸானிய இராணுவத்தின் முகாம்களுக்குள் இருப்பர் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

அன்ஸானிய விடுதலை இயக்கம் அதை தனது சிந்தனையில் எடுத்தது. ஏற்றுக் கொண்டது. ஆனால் தமது முகாம்களுக்குள் இருக்கக் கூடிய சூடானிய இராணுவத்தினரின் எண்ணிக்கையை அது வரையறை செய்தது.

அதன்படி —

ஒரு முகாமினுள் அன்ஸானிய வீரர்கள் 90 பேர் இருந்தால் சூடானின் இராணுவத்தினர் 10 பேர் மட்டும் இருக்க முடியும் என்ற மாதிரியான அடிப்படையில் உடன்பாடு ஏற்பட்டது.

அதனால் தமது பாதுகாப்பை அன்ஸானியர்கள் உத்தரவாதப்படுத்தினர். எனவே பெயரளவில் சூடானிய தேசிய இராணுவம் என்ற ரீதியில் இருந்தாலும் செயல்பூர்வ அர்த்தத்தில் அது அன்ஸானிய இராணுவம் ஆயிற்று.

இது வரலாற்றில் சமஷ்டி அமைப்பு முறையின் கீழ் ஏற்பட்ட அடிப்படையான மாற்றம் ஆகும்.

இரண்டு இராணுவங்களை ஓர் அரசுக்குள் கொண்டு வந்து எப்படி கலப்பது என்ற பிரச்சினைக்கு சிறந்த முன்னுதாரணமாக அந்த அரசமைப்பு அமைந்தது.

அந்த வழியில் அன்ஸானியரின் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி எடுக்கப்பட்டது.

ஏனைய நாடுகளின் சமஷ்டி முறையில் இருந்து அன்ஸானியர்களின் சமஷ்டி முறை வேறுபட்டிருப்பதை இதிலிருந்து நாம் காணலாம்.

**சமஷ்டியின் அளவு**

ஒடுக்குபவர்களின் தன்மையும், பகைமையின் அளவுமே எப்போதும் சமஷ்டியின் அளவை நிர்ணயிக்கும்.

எவ்வளவுக்கு எவ்வளவு ஒடுக்குமுறை அதிகமோ அவ்வளவுக்கு அரசமைப்பில் உத்தரவாதம் தேவை.

எவ்வளவுக்கு எவ்வளவு ஒடுக்குமுறை குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு சமஷ்டியின் அதிகார எல்லை சிறிதாக இருக்க முடியும்.

இந்த அடிப்படையிலேயே சமஷ்டி முறையில் பல படிகள் உருவாகின.

சமஷ்டி (Federation) முறையின் கீழ் இறைமை ஓர் அரசுக்கு இருக்கும். அந்த அரசின் இறைமையின் கீழ் ஒரு சமஷ்டி மாநிலம் இருக்கும். Confederationனின் கீழ் இரு இறைமையுள்ள அரசுகள் கூட்டுச் சேர்ந்திருக்கும்.

**கியூபெக்கின் உதாரணம்**

ஆனால் இன்று சமஷ்டி முறை வரலாற்றில் மனிதன் இந்த இரண்டையும் கடந்து மேலே போய்விட்டான்.

அதுதான் 'கியூபெக்'கின் உதாரணம்.

கியூபெக்கியர்கள் இறைமை ஸ்தாபனம் (Sovereignity Association) என்கின்ற ஒரு கோரிக்கையை முன்வைத்தனர்.

அந்த அரசமைப்பின் படி இரு அரசுகளுக்கும் இறைமை இருக்கும், பொதுவான நாணயம் இருக்கும்.

இரு அரசுகளையும்இணைப்பதற்கு ஒரு பொதுச் சபை இருக்கும். ஆனால் பொதுவான அரசமைப்புஇருக்காது.

இரு அரசுகளும் தமக்கு இடையிலான உறவுகளைப்பரமாரிப்பதற்கு கடவுச்சீட்டு "விஸா" எதுவும் இருக்காது.

ஆனால் "கியூபெக்" கனடாக்கு வெளியேஉறவுவைத்திருப்பதற்காக அதற்கு பாஸ்போட், விஸா உரிமைகள் இருக்கும்.

இதுதான் கியூபெக்கியர்களின் கோரிக்கை.

சமஷ்டி முறையின் மிக உச்சமான கோரிக்கையும் இதுதான்.

சமஷ்டியினுடைய வேறுபாடுகள் வரலாற்றில் மாறி மாறி அதிகரித்துக் கொண்டு போவதை நாங்கள் இதிலிருந்து காண முடிகிறது.

**1957ஆம், 1995 ஆம்**

பகைமையின் அளவு கூடும்போதே சமஷ்டி அரசமைப்பில் வேறுபாடுகள் வருகின்றன.

அப்படியானால் — 1957 ஆம் [illegible]

பகைமையின் அளவுதான் இலங்கையில் இப்போதும் இருக்கிறதா?

தமிழ்-சிங்கள மக்களிடையேயான உறவின் அளவு 57 ஆம் ஆண்டில் இருந்ததைப் போலவா இப்போதும் இருக்கிறது?

பண்டா — செல்வா ஒப்பந்தம் 1957 ஆம் ஆண்டில் தான் செய்யப்பட்டது. அதன் பின்னர் தான்—1958 ஆம் ஆண்டில் — தமிழருக்கு எதிரான இன அழிப்பு கட்டவிழ்த்து விடப்பட்டது. உயிருடன் தமிழர்கள் எரிக்கப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்ட

> **இலங்கையின் அரசியல் போக்கில் மாற்றங்களைச் செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா நெடுந்தூரம் செல்லவேண்டி இருக்கும். அவ்வாறு நெடுந்தூரம் செல்வதற்கான அடியெடுப்புகள் எதனையும் இன்று எம் கண் முன்னால் காணமுடியவில்லை......**

னர். சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

இவை அனைத்தும் பின்பு படிப்படியாகத் தொடர்ந்து நடந்து வந்தன.

1957 ஆம் ஆண்டில் — தமிழ்-சிங்கள மக்களிடையே வெறும் முரண்பாடு மட்டும் நிலவிய காலத்தில் — ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஒரு ஒப்பந்தம்—

தற்போது பகைமை பல மடங்கு வளர்ந்த பின்னர் —

பல உயிர்த்தியாகங்கள் செய்யப்பட்ட பின்னர்—

வாழ்வின் அத்திவாரமே குலைந்திருக்கின்ற நிலையில் —

அன்றைய அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஒரு தீர்வினைப் பற்றி இப்போது சிந்திக்க முடியுமா?

1957 ஆம் ஆண்டில் தமிழர்களின் பிரதானமான பிரச்சினைகளில் ஒன்று குடியேற்றம். அப்போது இருந்த குடியேற்ற நிலைமை இப்போது இல்லை.

பண்டாரநாயக்காவுடன் செல்வநாயகம் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது அல்லைக் கந்தளாய் கல்லோயா பகுதிகளில் விவசாய நோக்கம் கருதிய சிறு சிங்களக் குடியேற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டிருந்தன.

அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் தமிழர் பகுதிகளில் இன்று இருக்கின்ற சிங்களவர்களின் தொகை இருந்திருக்கமுடியாது.

ஆனால்—

இன்று பெரும் எண்ணிக்கையான குடியேற்றங்கள் செய்யப்பட்ட பிறகு 57 ஆம் ஆண்டுக்கு எம்மால் போகமுடியுமா?

ஆயினும் அதற்கும் ஒரு தீர்வை வரலாறு கண்டுள்ளது. அதுதான் குடியேற்றத்தை மீள அகற்றுதல் (De - Colonization)

இந்தியாவில் இந்திரா காந்தி ஆட்சியில் இருந்த போது அஸாமில் இதுபோன்ற கோரிக்கை அஸாம் மாணவர்களால் முன்வைக்கப்பட்டது.

அஸாமில் 1947 ஆம் ஆண்டின் பின் குடியேறிய வங்காளிகள் அனைவரும் வெளியேற வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை ஆகும்.

முதலில் 1970 ஆம் ஆண்டின் பின் குடியேறியவர்களை அப்புறப்படுத்துவதற்கு இந்திரா காந்தி இணங்கினார். அது ஏற்கப்படவில்லை. பின்னர் 1960 ஆண்டின் பின்னர் குடியேறியவர்களை வெளியேற்றுவது என்ற உடன்பாடு இருதரப்பினரிடையேயும் ஏற்பட்டது.

அவ்வாறு குடியேறியவர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் தான் அஸாம் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

எனவே குடியேற்றத்தை மீள அகற்றுதல் என்கிற விடயம் எங்கள் அயல் நாடு ஒன்றில் நடைமுறையில் வந்துள்ளது.

ஆனால் எமது நாட்டில் குடியேற்றத்தை மீள அகற்றுதல் என்பது சரிவருமா? அதனைச் செய்து அரசமைப்பில் மாற்றம் செய்ய முடியுமா?

**சந்திரிகாவின் தீர்வுத்திட்டம்**

பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலான [illegible] இணைக்கும் முடிவுக்கு சில[illegible]

துங்கா முன்வரக் கூடும்.

கிழக்கில் இருந்து சிங்களப் பகுதிகளையும், முஸ்லிம் பகுதிகளையும் பிரித்து எடுத்துக் கொண்டு ஏனைய பகுதிகளை வடக்குடன் இணைப்பது என்ற முடிவுக்கு அவர் வரலாம். அதற்கான சாத்திடங்கள் உள்ளன.

ஆனால் இதன்படி தமிழ் பிரதேசங்களில் இருந்து பறித்தெடுக்கப்பட்ட சிங்களப் பகுதிகளை வெளியே விடுவது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையுமா?

அநேகமாக இந்தப் பிரச்சினை தமிழர் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுதல் கடினமாகவே இருக்கும்.

அதே சமயம் —

விடுதலைப் புலிகளின் இராணுவத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையில் புதிய அரசமைப்பில் உத்தரவாதத்தை அரசினால் ஏற்படுத்த முடியாது.

சூடானில் அன்ஸானிய இராணுவத்தை ஏற்றுக் கொண்ட வடிவத்தில் அரசு விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்ளுமா என்பது அடுத்த பிரச்சினை.

மத்தியில் உள்ள சிங்கள அரசினால் உருவாக்கப்படும் அரசமைப்புச் சட்டம்; தமிழ் மக்களின் மாநில அரசின் விடயத்தில் எந்த மாற்றங்களையும் செய்யாது என்ற உத்தரவாதத்தை புதிய அரசமைப்பு கொண்டு வருமா?

அவ்வாறு கொண்டுவரப்பட்டாலும் அடுத்து வருகின்ற அரசாங்கம் இராணுவ ரீதியாக அதை மீறமாட்டாது என்பதற்கு உத்தரவாதம் இருக்குமா?

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவாதங்கள் பொதுவாக மிகையான ஆர்வத்துடன் உருவாக்கப்பட்டவை. அந்த உத்தரவாதங்கள் கண் முன்னால் கரைந்து போன கட்டங்களை நாம் பார்க்கலாம்.

ஆட்சிக்கு வந்தால் திறந்த பொருளாதாரத்தை கட்டுப்பாடான பொருளாதாரமாக மாற்றுவேன் என்று கூறிய அவர், இன்று ஐ.தே.க. அரசாங்கத்தை விடவும் திறந்த பொருளாதாரத்தை கூடுதலாகத் திறந்து விட்டுள்ளார்.

நான் பதவிக்கு வந்தால் புத்தளம் அமெரிக்க வானொலி நிலையத்தை மூடிவிடுவேன் என்று கூறியிருந்தார்.

ஆனால் இன்று நாம் இடையிடையே போய் பார்க்கிறோம். அது இயங்கலாம் என்று கூறிவிட்டார்.

**சந்திரிகாவின் உத்தரவாதம்**

சில மாதங்களுக்குள்ளேயே அவரது உத்தரவாதங்கள் இத்தகைய நிலைமைக்குச் சென்று விட்டன.

அப்படியானால் — இனப் பிரச்சினை தொடர்பான அவரது வாக்குறுதிகள் எப்படி இருக்கப் போகின்றன?

உண்மையில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய அடிப்படைத் தன்மைகளை அவர் இயல்பில் கொண்டிருக்கவில்லை.

இலங்கையின் அரசியல் போக்கில் மாற்றங்களைச் செய்வதற்கு அவர் நெடுந்தூரம் செல்லவேண்டும். அவ்வாறு நெடுந்தூரம் செல்வதற்கான அடியெடுப்புக்கள் எதுவும் இன்று எம் கண் முன்னால் தெளிவாகத் தெரியவில்லை.

தமிழர்களுக்கான அதிகாரக் கைமாற்றம் என்பது வெளிநாடுகளில் காணப்படுகின்ற எந்தசமஷ்டி அலகுகளின் அதிகார அமைப்புகளுக்கும் ஒத்தாக ஒருபோதும் இருக்க முடியாது.

அதேபோன்று—

அரசமைப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் மரபுவழி அரசமைப்பு அணுகுமுறைகளையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசமைப்பு விவகாரத்தில் மேலைத்தேயப் பின்பற்றல்கள் எம்மிடையே இருக்க முடியாது;இருக்கவும்கூடாது.

இந்திய சமஷ்டி அரசமைப்பு மாதிரியான ஓர் அரசமைப்பு எமக்கு ஒருபோதும் பொருந்தாது.

தியாகங்களின் வெளிப்பாடாக,இழப்புகளின் வெளிப்

தொகுப்பு:
**நல்லூர் தாஸ்**

பாடாக பகைமையின் உச்சக்கட்டத் தோற்றுவாயாக இந்தியாவில் சமஷ்டி அமைப்பு தோன்றவில்லை.

எமக்குப் பிழையாகப் போதிக்கப்பட்ட கல்வி முறையாலும்—

வெள்ளையர்களினால் போதிக்கப்பட்ட அரசியல் மரபு சிந்தனைகளுக்கு ஊடாகவும் தான் நாங்கள் எங்களைப் பார்க்கப் பழகிவிட்டோம்.

இந்த வகையில் மேலைத்தேயபின்பற்றல்கள் மூலமோ, அல்லது மரபு வழி அரசமைப்புச் சிந்தனைகள் ஊடாகவோ தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் புதிய அரசமைப்பு ஒன்றை ஒருபோதுமே உருவாக்க முடியாது .அவ்வாறான ஒரு அரசமைப்பை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

# லெபனானில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை பெண்கள் விடுதலையாவர்

கொழும்பு, மார்ச் 29

லெபனானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 இலங்கைப் பெண்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இவர்கள் லெபனான் தலைநகர் பேரூட்டில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடவுச் சீட்டுக்களை வைத்திருக்காமை மற்றும் வேலை செய்வதற்குரிய அனுமதிப் பத்திரம் பெற்றிருக்காமை போன்ற குற்றங்களுக்காகவே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் மகிந்த ராஜபக்ச லெபனானின் தொழில் அமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது இந்த 18பேரையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யும்படி கோரினார்.

இதன் விளைவாகவே இவர்கள் விடுதலை செய்யப்படஉள்ளனர். (இ-5)

**அமைச்சுக்களின் தளபாடங்கள் மாயம்:**

# முன்னாள் அமைச்சர்கள் இருவரை இரகசியப் பொலீஸார் விசாரணை

கொழும்பு, மார்ச். 29

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினதும், முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவினதும் அமைச்சரவைகளில் இடம்பெற்றிருந்த முன்னாள் அமைச்சர்கள் இருவரை, அவர்களது அமைச்சுக்களிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் விசாரணை செய்திருக்கின்றனர்.

அமைச்சுச் சின்னம் பொறிக்கப்பட்ட இந்தத் தளபாடங்கள் பின்னர் சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்களின் தனிப்பட்ட வாசஸ்தலங்களிலிருந்து கைப்பற்றப்பட்டதாக இரகசியப் பொலீஸார் தகவல் வெளியிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக — உரிய நடவடிக்கை எடுப்பதற்காக — தமது அறிக்கையை இரகசியப் பொலீஸார் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு முன்னாள் அமைச்சரும் இதேபோன்ற சம்பவத்துக்காக இரகசியப் பொலீஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் —

அது சம்பந்தமான அறிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட இருந்தது என்றும் —

இரகசியப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பிரிட்டிஷ் எம்.பிக்கள் குழு வடக்கு - கிழக்கு வரும்

கொழும்பு, மார்ச் 29

வடக்கு — கிழக்கு பகுதியின் நிலைமைகளை நேரில் பார்வையிட பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று இலங்கை வரவிருப்பதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று அப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலையை பார்வையிடுவது —

அங்கு ஆரம்பிக்க வேண்டிய புனர்நிர்மாணப் பணிகள் குறித்து ஆராய்வது — இந்த குழுவின் முக்கிய பணியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பயிற்சிக்காக வெளிநாடு சென்ற ராணுவ அதிகாரிகள்

கொழும்பு, மார்ச் 29

இராணுவ யுத்த தந்திரோபாயங்களை வலுப்படுத்தும் நோக்குடன் இலங்கை இராணுவத்திலுள்ள பல உயரதிகாரிகள் பயிற்சி பெறுவதற்காக வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றுள்ள அசோக ஜெயவர்த்தனா, இங்கிலாந்திலுள்ள இராணுவ பல்கலைக்கழகம் ஒன்றிற்கும்—

கடற்படை பிரதம அதிகாரி ஈ. கே. தஸநாயக்க, கடற்படை பயிற்சிகளை பெறுவதற்காக பாகிஸ்தானுக்கும் — சென்றுள்ளனர்.

அமெரிக்காவின், ஹவாய் தீவில் நடைபெறும் இராணுவ ஒத்திகை ஒன்றை பார்வையிடுவதற்காக இராணுவ பிரதி தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஹொஹான் தடுவத்த பிரிகேடியர் சரத் பொன்சேகா ஆகியோர் சென்றுள்ளனர். (இ-14)

## மிதிவெடியில் சிக்கி படுகாயம்

ஆட்டுக்கு குழை வெட்டச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு படுகாயமடைந்தார்.

பத்தமேனி தென்செம்பாட்டு தோட்டப் பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் பத்தமேனியைச் சேர்ந்த சந்திரசேகரம் ரமேஷ்காந்தன் (வயது 21) என்ற இளைஞனே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995ஆம் ஆண்டிற்கான
மகர யாழ் விருது பெறும்



வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா
அவர்களுக்கு
எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

பண்டத்தரிப்பு வை. எம். சி. எ.
ஆளுநர்சபை உறுப்பினர்கள்
ஊழியர்கள், அங்கத்தவர்கள்
(சி 857)

# மற்றைய முக்கிய பிரச்சினைகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் நன்கு அறிவீர்கள். சங்குப்பிட்டி பாதையூடாக, எவ்வித அழுத்தமுமின்றி சுதந்திரமாக எமது மக்கள் போக்குவரத்து செய்வதற்கு பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டுமென நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினை குறித்து நீங்கள் ஆக்கபூர்வமான பதில் எதையும் தரவில்லை. பதிலாக, முகாமின் காவலரண்கள் 600 மீற்றர் வரை பின்நகர்த்தப்பட்டுள்ளதாக. அரசின் பழைய நிலைப்பாட்டையே நீங்கள் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறீர்கள்.

## முடிவெடுக்கும் அதிகாரம் உடையவர்களையே யாழ்ப்பாணத்துக்கு பேச்சுக்கு அனுப்புங்கள்!

கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடவேண்டும் என்ற எமது கோரிக்கைக்கும் இதுவரை சாதகமான பதில் எதையும் நீங்கள் தரவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டால்தான் சமாதான சூழ்நிலை நிலையானதாக வலுப்படுத்த முடியும்; இயல்புநிலை தோன்ற முடியும்; சமாதானப் பேச்சுக்களையும் முன்னெடுக்க முடியும். எனவே, நீங்கள் யாழ்ப்பாணம் அனுப்பவிருக்கும் அரச குழுவினர், இந்தப் பிரச்சினைகள் குறித்து பேசி முடிவெடுக்கும் அதிகாரமுடையவர்களாக இருப்பது உகந்தது.

## சமாதான சூழ்நிலை ஏற்பட செய்யப்பட்டவை புலிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அல்ல

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விசேட சலுகைகள் அளித்து, அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதாக உங்களது கடிதத்தில் ஒரு பட்டியல் போட்டுள்ளீர்கள். ஆயுதங்களை சரணடையக் கேட்காது பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டது, யாழ்ப்பாணத்திற்கு அரச குழு விஜயங்களை மேற்கொண்டது போன்ற விடயங்கள் இந்தப்பட்டியலில் அடங்குகின்றன. இவை எல்லாம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளாக நீங்கள் கருதுவது மிகவும் பெரிய தவறாகும். இந்த நடவடிக்கைகள், சமாதான சூழ்நிலை உருவாக்கம் பெறுவதற்கு அத்தியாவசியமானவையே தவிர, இவை எமக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அல்ல.

## புலிகள் அமைப்பு தேசிய விடுதலை இயக்கம் அதை ஆயுதக்குழு என எண்ணுவது தவறாகும்

அதேபோலவே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் ஆயுதக்குழுவென நீங்கள் எண்ணுவதும் மிகவும் தவறான பார்வையாகும் நாம். எமது மக்கள் மத்தியில் ஆழவேர் பதித்து நிற்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கம். தமிழ்த் தேசத்தின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் விடுதலை அமைப்பு. எமது முக்கியத்துவத்தையும், நாம் வகிக்கும் பங்கையும் அங்கீகரித்து, எமது இயக்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு முன்வந்த நீங்கள், சமாதான சூழலுக்குத் தேவையான சில நடவடிக்கைகளை எடுத்துவிட்டு அவற்றை புலிகளுக்கு வழங்கிய சலுகைகளாக சித்திரிக்க முனைவது மிகவும் தவறானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நீங்கள் முடிவெடுத்த விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதும், ஏனைய பிரச்சினைகளுக்கும் சாதகமான தீர்வு காண்பதும், இனப்பிரச்சினை குறித்த அரசியல் பேச்சுக்களுக்கு ஏதுவாக அமையும் என்பதையும் நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

அன்புடன்
உங்கள் நேர்மையுள்ள
வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

### 769 பாதையூடாக பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச். 29

கடந்த சில மாதகாலமாகத் தடைப்பட்டிருந்த தாவடி — மானிப்பாய் மினிபஸ் சேவை இன்று முதல் 769 பாதையூடாக நடைபெறும் என்று சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் இணையம் அறிவித்துள்ளது. (ஒ)

### ஆசிரியர் மே சம்பளம் நிலுவையுடன்

கொழும்பு, மார்ச் 29

கடந்த ஜனவரி மாதம் முதல் ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு, நிலுவையுடன் மேமாதத்தில் வழங்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்தார். (இ-3)

### புலமைப் பரிசில்

தென்மராட்சி, மார்ச். 29

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலமைப் பரிசில் நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சங்க எல்லைக்கு உட்பட்ட 24பாடசாலைகளைச் சேர்ந்த 24 மாணவர்களுக்கு இதன் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அல்லது தமிழீழ இளநிலைத் தேர்வில் ஆகக் கூடிய புள்ளிபெறும் ஒவ்வொரு பாடசாலையின் மாணவருக்கும் இப்பரிசில் வழங்கப்படும். (இ-14-117)

### சாதாரணமான..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வித்தார்.

அத்துடன் வட பகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்துவதற்கு தமது அரசு தயாராக இருப்பதாகவும், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது புலிகளிடம் சமர்ப்பிக்கவென தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் —

இலங்கை அரசு பிரபாகரனை பார்க்கக் கூட இல்லை. எனவே அவரை ஒப்படைப்பது என்பது இயலாதது — என்றார்.

வாய்ப்பு வந்தால் புலிகள் தலைவர் கைது செய்யப்படுவாரா என்ற மற்றொரு கேள்விக்கு —

சந்திரிகா மழுப்பலாக அது சூழ்நிலையைப் பொறுத்தது என பதிலளித்தார். (ஒ-6-7)

## மரண அறிவித்தல்கள்

அருட் சகோதரி
### மேரி அலெக்சிஸ் (தி. கு.)

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி அலெக்சிஸ் மனுவேற்பிள்ளை அவர்கள் 23-03 95 இல் அநுராதபுரத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 25-03-95 சனிக்கிழமை வவுனியா திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடைபெற்றது.

அன்னாருக்கான இரங்கற் திருப்பலி நாளை (30-03 95) வியாழக்கிழமை பி.ப. 4-30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும். அவரின் உறவினர்கள், நண்பர்கள், சேவையைப்பெற்ற அனைவரையும் இத்திருப்பலியில் பங்குகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மாகாணத் தலைவி

தி.கு. மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். (35944)

திருமதி
### கமலாம்பா சண்முகநாதன்
(கல்வியங்காடு)

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பா சண்முகநாதன் 28-3 95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குமாரசாமி சண்முகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், நடராசா, ஆறுமுகம் மற்றும் மனோன்மணி நடராசா ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-3-95) புதன் முற்பகல் 10 00 மணியளவில் அவரது 104, அம்பலவாணர் வீதி, அத்தியடி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க. நாகலிங்கம்
(பெறாமகள்)

104, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (35937)

### செல்வி வத்சலா கணபதிப்பிள்ளை
இணுவில்

இணுவில் மேற்கைச் சேர்ந்த செல்வி வத்சலா கணபதிப்பிள்ளை ஜேர்மனியில் 24-3-95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் கணபதிப்பிள்ளை (Rtd S. A S. H. S. Office Jaffna), திருமதி ஜகமா கணபதிப்பிள்ளை [ஜேர்மனி] ஆகியோரின் மூத்தமகளும், செந்தில்குமார்(ஜேர்மனி), குலமதி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், ரஜீவ் (ஜேர்மனி), கலாதரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 28-3-95 இல் ஜேர்மனி சுவற்றா நகரில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ ஞானதுரை
[சிறிய தகப்பன்]

செந்தில் வாசம்
கந்தசாமி கோவிலடி,
இணுவில் மேற்கு (35945)

திருமதி
### திரேசா சற்குணநாயகம் சிவப்பிரகாசம்

சூராவத்தையைச் சேர்ந்த திருமதி சற்குணநாயகம் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஜயசிங்கம், பாலசிங்கம், வண. பிதா துரைசிங்கம், குணசீலநாயகம், மற்றும் பேரின்பநாயகம் ஜெயசிங்கம், அரியநாயகம் ஆகியோரது அன்புச் சகோதரியும், றெஜி, பத்மா, சுபாசினி ஆகியோரின் வளர்ப்புத் தாயுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [29.03.95] பி.ப. 4.30 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
பொளின பிரேமினி
[மருமகள்]

சூராவத்தை,
சுன்னாகம். [35948]

## தலைவர் விதித்த காலக்கெடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிசிலனை செய்து ஒரு முடிவு எடுக்கும் வரை, அக்கடிதத்தின் விவரத்தை வெளியிடாமல் இருந்தோம்.

அக்கடிதத்தை கவனமாக பரிசிலனை செய்த பின்னர் எமது தலைவர் சில முடிவுகளை எடுத்து நேன்று [செவ்வாய்] 28 ஆம் திகதி ஜனாதிபதிக்கு பதில் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

எரிபொருள் மீதான தடையை நீக்குவது, மீன்பிடி சம்பந்தமான தடைகளை முற்றாக நீக்குவது ஆகிய ஆக்கபூர்வமான முடிவுகளை அரசாங்கம் எடுத்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

முடிவுகள் மட்டும் எடுக்கப் பட்டுள்ளன.

"எந்த முடிவுகள் எடுத்தாலும் அவை உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும்." — என்று தலைவர் பிரபாகரன் ஏற்கனவே சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்.

இரண்டு முக்கிய விடயங்களுக்கு சாதகமான முடிவு எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி தமது கடிதத்தில் தெரிவித்திருந்தபோதும்—

அவற்றை அமுல் செய்வது சம்பந்தமாக எம்முடன் பேச வேண்டும் என்று அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த விடயங்களை நடைமுறைச் சாத்தியமான முறையில் அமுல் செய்வது தொடர்பாக பேசுவதற்கு அரச தரப்பு குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப் போகிறோம் என்றும—

அந்தக்குழு நடைமுறைகள் பற்றி பேசி முடிவு செய்யலாம் என்றும்—

ஜனாதிபதி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இவை அந்த கடிதத்தில் உள்ள சாதகமான அம்சங்கள் ஆகும். முடிவெடுக்கும் அதிகாரமுடைய குழு பேச்சு நடத்த வரவேண்டும் என்று தலைவர் கூறியுள்ளார். அதற்கு ஏற்றவாறு யாரையாவது தெரிவுசெய்து அரசு அனுப்பலாம்.

### பாதகமான அம்சங்கள்

பூநகரி முகாமை அகற்றி யாழ்ப்பாணத்துக்கான பாதையை திறப்பது, கிழக்கு மாகாணத்தில் எமது ஆயுதப் போராளிகள் சுதந்திரமாக நடமாடுவது ஆகியன தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கடிதத்தில் எந்தவித சாதகமான பதிலும் இல்லை.

இவை அக்கடிதத்திலுள்ள பாதகமான அம்சங்களாகும்.

பூநகரி பாதை திறக்கப்பட்டுள்ளது என்றும், இராணுவ முகாம் 500 மீற்றர் வரை பின் தள்ளப்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது எமக்குத் தெரியும். அது பழைய விடயம்.

### இரு விடயங்களிலேயே சாதகமான முடிவு

புலிகள் முன் வைத்த நான்கு கோரிக்கைகளில் இரண்டு கோரிக்கைகள் மட்டும் சாதகமான முடிவு எடுக்கப்பட்டுள்ளன. சாதகமான முடிவு எடுக்கப்பட்டுள்ளதே தவிர அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பேச்சு நடத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

முன்னரும் பொருளாதாரத் தடையை நீக்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார் வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்டது. ஆனால் அதனை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல் இருந்தது என்பது தெரிந்த விடயமே.

எரிபொருள் தொடர்பாக முடிவு எடுத்தாலும் இராணுவம் நிச்சயமாகப் பிரச்சினைகளை கொடுக்கும் இது போன்ற பல சிக்கல்கள் உள்ளன.

### சந்திரிகாவின் ஆட்சேபம்

தலைவர் காலக்கெடு விதித்தகற்கு ஜனாதிபதி தமது கடிதத்தில ஆட்சேபம் தெரிவித்துள்ளார்

"நீங்கள் விதித்த காலக்கெடுவை ஏற்கமுடியாது. அப்படி காலக்கெடு விதிக்க முடியாது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

### காலக்கெடு விதித்தது ஏன்?

காலக்கெடுவை நாம் கொடுக்கபடியால்தான் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை மாற்றி இணக்கத்துக்கு வந்துள்ளார்.

அன்றாடப் பிரச்சினைகள் இராணுவ ரீதியாக பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும்—

அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தலாக அமையும் என்றும்—

ஜனாதிபதி முன்னர் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

அதன் பின்புதான் தலைவர் காலக்கெடு விதித்தார்.

இந்தக் காலக்கெடு விதிக்கப்பட்டதால்தான் ஜனாதிபதி இறங்கி வந்துள்ளார்.

இல்லாவிட்டால் பேச்சு முறியும். யுத்தம் தொடங்கும் என்ற பயத்தில் இறங்கி வந்திருக்கிறார்.

அந்தக் காலக்கெடுவை நாங்கள் தற்போது நீடித்தகற்குக் காரணம் அரசு வழங்கிய வாக்குறுதிகளை, முடிவுகளை நிறைவேற்றிக் காட்டுவதற்கு வாய்ப்பளிக்கவே.

நாம் அப்படி காலக்கெடு விதிக்காது விட்டால் பின்னரும் அவர்கள் காலத்தை இழுத்தடிப்பார்கள்.

கால எல்லைக்குள் இந்த அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்தால் பின்னர் அரசியல் பேச்சைத் தொடரலாம். அதற்கான சூழ்நிலையும் ஏற்படும்.

நாம் காலக்கெடு விதித்த தன் பின்னர் அன்றாடப் பிரச்சினை பற்றிபேச குழு ஒன்றை அனுப்பப்போவதாக ஜனாதிபதி கடிதம் எழுதினார்.

"ஆறு மாதமாகப் பேசி விட்டோம் தொடர்ந்தும் பேசிப்பயனில்லை திர்மானங்களை எடுங்கள்." — என்று தலைவர் பதில் அளித்திருந்தார்.

அதன் பின்பே அவர் இந்த தீர்மானத்தை எடுத்து அறிவித்தார். — என்றார்.

### மட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த வேளை— இந்தக் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை மேற்கொண்டனர்.

அச்சமயம் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப் பட்ட பொது மக்களில் 14 பேர் மீண்டும் வீடு திரும்பவில்லை.

இவ்வாறு காணாமற்போனவர்கள் கித்துள் இராணுவ முகாமைச் சேர்ந்த படையினரின் சுற்றி வளைப்பின் போதே காணாமற் போயினர் என பொலிஸ் அதிபரிடம் முறையிடப்பட்டது.

இம் முறைப்பாட்டை வேப்பவெட்டுவான் செங்கலடியைச் சேர்ந்த தம்பிராசா சேனாதிராசா என்பவர் செய்திருந்தார்

அதனை அடுத்து இச்சம்பவம் தொடர்பாக அன்றையதினம் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதனை விசாரித்த நீதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினரை அடையாள அணிவகுப்புக்கு ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (ஒ-5)

### இலவச வைத்திய சேவை

தென்மராட்சி, மார்ச் 29

யாழ் திருக்குடும்ப கன்னியர்மட நடமாடும் வைத்தியப் பிரிவினர் முகமாலைப் பகுதியில் வாராந்தம் சனிக்கிழமைகளில் இலவசவைத்திய சேவையை நடத்தி வருகின்றனர்.

முகமாலை அன்னை திரேசா தேவாலயம் முன்பாக நடைபெறும். இச்சிகிச்சை முகாமில் முகமாலை, இந்திராபுரம் இத்தாவில், வேம்போடுகேணிப்பகுதி மக்கள் வைத்தியசேவையைப் பெற்று வருகின்றனர். [இ-117]

### வங்கி வாடிக்கையாளர் கூட்டம்

யாழ். மாவட்ட அரச தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கத்தின் விசேட கூட்டமும் கலந்துரையாடலும் கடந்த 11 ஆம்திகதி 'பிலிபஸ்' ஞாபகார்த்த வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் மக்கள் வங்கி பிராந்தியமுகாமையாளர் திரு. அருளானந்தம், இலங்கை வங்கியின் முன்னாள் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு கணேசமூர்த்தி, யாழ். மாவட்ட வணிகர்கழகங்களின் இணைத்தலைவர் திரு. ஜோதிலிங்கசாமி, வங்கி வாடிக்கையாளர் சங்க சட்ட ஆலோசகர் திரு. சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### சச்சிதானந்தன் சரோஜினிதேவி

திருமதி சச்சிதானந்தன் சரோஜினிதேவி நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் கந்தையா சச்சிதானந்தனின் அன்புமனைவியும், ஜெயலக்ஷ்மி, ஜெகதீசன் [சுப்பேர்ப் பிறாம், திருநெல்வேலி], மனோகரன், காலஞ்சென்ற தயாபரன் (நொதேண் பார்மசி), மற்றும் துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும், பாலசுப்பிரமணியம் [விலை மதிப்பீட்டு திணைக்களம், யாழ்ப்பாணம்], றேணுகாதேவி, தனரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும், இரத்தினசிங்கத்தின் மைத்துனியும், பிரசாத், ஜெசிந்தியா, உருத்திரா, உமாசங்கரி, டமேசா, பானுஜா ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று 29-3-95 பிற்பகல் 1 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. ஜெகதீசன்
(மகன்)
[சுப்பேர்ப் பிறாம், திருநெல்வேலி]

141, கேணியடி,
திருநெல்வேலி. (35946)

### கணபதிப்பிள்ளை குணபாலசிங்கம்

குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கணபதிப்பிள்ளை குணபாலசிங்கம் நேற்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை — அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சந்திரமோகன் (கமலாலயம் சிற்பக்கூடம்), சந்திரவதனி, சந்திரரூபன், சந்திரராசன், யோகேஸ்வரி, ஸ்ரீரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

இறுதிக் கிரியைகள் இன்று (29-03-95) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரமோகன் (மகன்)
(கமலாலயம்)

பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம். (35949)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org